மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முதலாவதாக, பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்த வனத்துறை சம்பந்தமான கேள்வியை எழுப்பினார்; இரண்டாவதாக, குளம் வெட்டுதல் போன்ற நீராதாரத்தை உருவாக்குவது குறித்த, பொதுப் பணித் துறை சம்பந்தமான கேள்வியை எழுப்பி, இரண்டு துறைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை ஒன்றாகவைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதிக்காகச் செலவு செய்யப்பட்ட விவரங்கள் ஏற்கெனவே இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தனியாகக் குறிப்புகளைப் பெற்று, நான் ஏற்கெனவே கூறிய பதிலில் குறிப்பிட்டதைப்போன்று, மேற்குறிப்பிட்ட பகுதியில் சரணாலயம் அமைப்பதற்குரிய சூழ்நிலைகள் இருக்குமேயானால், அவரது கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

42—

கொப்பரைக் கொள்முதல் நிலையம்

***1920—திரு. பெ. சுப்ரமணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி பகுதியில் கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒவ்வோராண்டும் இந்திய அரசு நிர்ணயிக்கும் ஆதரவு விலை மற்றும் வழிகாட்டுதல்களின்படி, தேசிய வேளாண் கூட்டுறவு

விற்பனை இணையத்தின் முகவராகச் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கொப்பரையைக் கொள்முதல் செய்யும். 2016 ஆம் ஆண்டிற்கான ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ், 15–6–2016 முதல் 30–11–2016 வரை கொப்பரைக் கொள்முதல் நடைபெற்றது. இந்நிலையில், மாரண்டஹள்ளி பகுதியில் தற்போது கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை. எனினும், தென்னை விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறின், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் அரசாணைகளுக்குட்பட்டு, மாரண்டஹள்ளி பகுதியில் கொப்பரைக் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்து உரிய நேரத்தில் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், விவசாயத்தை நம்பியிருக்கின்ற, தொழில்வளம் இல்லாத மாவட்டமாக இருக்கின்றது. தருமபுரி மாவட்டத்தில் அதிகப்படியாக தென்னை மரங்கள் இருக்கின்றன. அதிலும், குறிப்பாக, மாரண்டஹள்ளி பகுதியில் விளையக்கூடிய தேங்காய்களின் பருப்பு, மற்ற பகுதிகளில் விளையும் தேங்காய்களின் பருப்புகளைக்காட்டிலும் திடமானதாக இருக்கும். அதற்குக் காரணம், அந்தப் பகுதி, சின்னாறு வடிநிலப் பகுதியின் முதல் பகுதியாகும். அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் தென்னை மரங்களைப் பயிர் செய்து வருகிறார்கள். மாறி வரும் காலச் சூழ்நிலையில், இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தேங்காய்களின் பருப்பை விற்பனை செய்வதற்கு, தருமபுரி மாவட்டத்தைக் கடந்து, நெடுந்தூரம் செல்லவேண்டியிருக்கிறது. குறிப்பாக, தாராபுரம், தூத்துக்குடி ஆகிய ஊர்களுக்குச் சென்றுதான் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி எடுத்துச்சென்று விற்பனை செய்கின்றபோது, அவர்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையைப் பரிசீலித்து, அங்கே கொப்பரைக் கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்த இந்த அரசு முன்வரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2017 மார்ச் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கோரிக்கை விவசாயிகளிடமிருந்து அரசுக்கு வரும் பட்சத்தில், உறுதியாக அரசு நடவடிக்கை எடுக்கும். ஆனால், தற்போது அரவை கொப்பரைக்கு அரசு நிர்ணயித்திருக்கிற விலை ரூபாய் 59.50 காசு; பங்குக் கொப்பரைக்கு ரூபாய் 62.40 பைசா ஆகும். ஆனால் வெளிமார்க்கெட்டில் இன்றைக்கு அரவை கொப்பரை ரூ.81, பங்குக் கொப்பரை 84 ரூபாய் வரைக்கும் விலை போகிறது. எனவே, விவசாயிகள் அரசு அமைத்திருக்கிற கொப்பரைக் கொள்முதல் நிலையங்களுக்கு இப்போது அதைக் கொண்டுவருவது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற தருமபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நம்முடைய அரசால் கொப்பரை மையங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், கடந்த ஆறு மாத காலங்களில் அங்கு ஒன்பது நாட்கள் மட்டுமே விவசாயிகள் கொப்பரைக் கொள்முதல் நிலையங்களுக்கு வந்தார்கள். அதன் மூலமாக 2,500 கிலோ மட்டுமே அங்கு கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு யாரும் அங்கு வரவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கோரிக்கை, இன்றைக்கு விவசாயிகளின் மூலமாக வரும்பட்சத்தில், உரிய நேரத்தில் துறையின் மூலமாக ஆய்வு செய்து, இருக்கிற சட்ட விதிகளுக்குட்பட்டு, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

இன்னும் சொல்லப்போனால், இதற்கு முன்னால் எப்போது வேண்டுமானாலும் கொள்முதல் செய்யலாம் என்று சட்ட விதி இருந்தது. ஆனால், மத்திய அரசு 2014 ஆம் ஆண்டு ஒரு சட்ட விதியை உருவாக்கிவிட்டது. ஒவ்வொரு மாநிலமும் ஆறு மாதங்கள் மட்டுமே கொப்பரைக் கொள்முதல் செய்ய முடியும் என்று சட்ட விதிகளை உருவாக்கியிருக்கிறது. எனவே, இதையெல்லாம் பரிசீலித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, விவசாயிகள் நலன் பாதுகாக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

2017 மார்ச் 20]

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப் போன்று தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சருக்கும் தெரியும். அவருடைய பகுதிக்குண்டான கேள்வியைத்தான் நான் கேட்டிருக்கிறேன். மாரண்டஹள்ளி பகுதியில் அதிகப்படியான தென்னை மரங்கள் இருக்கின்றன. வருங்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்திலே எடுத்துக்கொண்டு, விவசாயிகளுடைய இந்த நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, கொப்பரைக் கொள்முதல் நிலையத்தை அமைக்க பரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கோரிக்கை இதுவரை வரவில்லை. கோரிக்கை வைத்தால் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்று சொல்லிவிட்டேன். இரண்டாவது, உறுப்பினர் கேட்பதற்குப் பதில் சொல்வதென்றால், விரிவாகச் சொல்லவேண்டியிருக்கும்; நேரம் ஆகிவிடும். உறுப்பினருடைய மாவட்டத்தில் வட்டார வாரியாக எவ்வளவு தென்னை மரங்கள் இருக்கின்றன என்ற விவரங்களெல்லாம் இருக்கின்றன. இருந்தாலும், சுருக்கமாகச் சொல்கிறேன். உறுப்பினருடைய மாவட்டத்தில் இருக்கிற மொத்த பரப்பளவில் 13.29 சதவீதம்தான் தென்னை பயிரிடப்படுகிறது. ஆண்டுக்கு மூன்று மாதங்கள் மட்டுமே அங்கு மழை பெய்யும். அது வறட்சி மிகுந்த மாவட்டம். எனவே, அங்கு தென்னை உற்பத்தி என்பது மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு மரத்திலிருந்து ஆண்டிற்கு 70 தேங்காய்கள்தான் உற்பத்தியாகும். எனவே, இந்தவகையில் பார்க்கிறபோது, தேங்காய் உற்பத்தி அங்கு மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, விவசாயிகள் யாரும் இந்தக் கொப்பரைக் கொள்முதல் மையங்களுக்கு வருவது இல்லை; அதனை அமைக்கக் கோரிக்கை வைப்பதும் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் அதுபோன்று விவசாயிகள் யாராவது வந்து கேட்டால், கோரிக்கை வைக்கச் சொல்லுங்கள். உரிய முறையில், உரிய நேரத்தில் சட்ட விதிகளுக்குட்பட்டு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*